சகல விதமான பள்ளிக்கூடப் புஸ்தகங்களுக்கும், இதர நூல்களுக்கும் உபகரணங்களுக்கும் உன்னதமான நிலையம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

# இந்துசாதனம்

செவ்வாய், வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 19/300 of 1939

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

[ புத் — ௬௦ ]  யாழ்ப்பாணம்:— சர்வதாரி ௵ மாசி ௴ ௧௭ ௨ (1949 மார்ச் 1 செவ்வாய்க்கிழமை) [ இல. — அஅ ]

வெளிவந்துவிட்டது ... ... வெளிவந்துவிட்டது

"ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும்"

ஆக்கியோன்:
உ.ு. V. M. சபாரத்தினசிங்கம் B.A.
நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்குரியது
விலை ரூபா 1.
எல்லாப் புத்தகசாலைகளிலும், சைவப்பிரகாச யந்திரசாலையிலும் பெறற்பாலது.
[Std. 46. 2-4—30-4-49.]

## ஹிந்து மத சாஸ்திரங்கள்

### கீதை காட்டும் பாதை

( க. இராமச்சந்திரன் )

(முற்றொடர்)

கர்மயோகமின்றிக் கர்ம சந்நியாசம் எளிதில் சாத்தியமாகாது. ஆகையால் ஆரம்பத்தில் கர்மயோகஞ் சொல்லப்பட்டது. சந்நியாசத்தின் விசேட லட்சணம் கர்மத்தை விட்டுவிடுவதன்று; இருவினைகளுங்கெட்டாத நிலையை அடைவதேயாம். கர்மஞ் செய்துகொண்டும் எப்படி ஒருவன் சந்நியாசிய வாழ்க்கை நடத்துவானோ, அப்படியே இன்னொருவன் ஒருசெயலும் செய்யாதிருந்தும் மிதியாசாளுக இருத்தல் கூடும். இந்தப் போவித நிலையையே கீதை ஆரம்பத்தில் கண்டித்துள்ளது. மூன்றும் அத்தியாயம் ஆறும் சுலோகத்திற்கு எதிர்மறையாக மிகவும் அழகாய் அமைந்துள்ள ஐந்தாம் அத்தியாயத்தின் மூன்றுஞ் சுலோகம்.

இந்த அத்தியாயத்தின் இரண்டாம் பாகத்தில், புலன்களை அடக்கிய ஞானி ஒன்பது வாயிலுள்ள உடலாகிய பட்டணத்தில் நிலைத்து நின்று ஒன்றும் செய்வதுமின்றி, செய்விப்பதுமின்றி, கேவலம் ஓர் சாட்சியாய் இருக்கும் உன்னத நிலையும், சமநிலையின் மனத்தைப் பூண்டு இயற்கையை வென்று பிரமத்துடன் ஒன்றும் பிரம்ம நிர்வாணமும் விளக்கப்பட்டுள்ளன. பிராண அபான வாயுக்களின் போக்குகளைச் சமமாகச் செய்ய அப்பியசிக்கப்படும் யோக மார்க்கமும் இங்கு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அடுத்த அத்தியாயமும் இதே தொடர்பில் வருவதால் தியான யோகமென அழைக்கப்படுகின்றது. முன்னர் விபரிக்கப்பட்டுள்ள யோகங்களிற் சித்தியடைவதற்கு சமத்துவ புத்தி அத்தியாவசியமாகின்றது. யோக சாதனையினாலேயே அவ்வித சமத்துவபுத்தியை அடைய முடியுமானபடியால், ஆறுவது அத்தியாயத்தில் அதற்குரிய பல முறைகள் தரப்பட்டுள்ளன. இங்கே துறவுக்கும் யோகத்திற்கு முள்ள தொடர்பு, யோகப்படியேறும் சாதகனுக்கு பயன்கருதாப் பணி சாதனமாகும் விதம், ஆத்மஜயம், மன அடக்கம், யோகப் பயிற்சி, யோகநிஷ்டை, சமதர்சனம் ஆகியவை இடம் பெறுகின்றன.

பகவான் புத்தரின் உபதேசங்களிலடங்கிய இரண்டு முக்கிய விஷயங்கள் இந்த அத்தியாயத்தில் வேரூன்றியுள்ளன. ஒன்று: தீமையைச் செய்து தவறின மாசுபடுத்திக்கொள்பவனும் தானே; தீமையைச் செய்யாது தனைத் தூய்மையாய் வைத்துக் கொள்பவனும் தானே. எனவே ஒரு மனிதனின் சுத்தமும் அசுத்தமும் அவனையே பொறுத்துள்ளன. எவனும் தனசொந்த முயற்சியின்றி இன்னொருவனால் பரிசுத்தவானாக்கப்படமாட்டான். கீதை ஆறும் அத்தியாயத்தின் ஐந்தாம் ஆறும் சுலோகங்களில் இந்த போதனையைக் காண்கின்றோம்,

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனுமாமே"

என்ற திருமூலர் வாக்காலும் அந்தப் போதனையின் எதிரொலியையே கேட்கின்றோம். மற்றையது புத்தர்பிரான் துலக்கிய 'புனித நடுப்பாதை' (The Noble Middle Pathe) இதன் கருத்தை கீதை ஆறும் அத்தியாயத்தின் 16ம் 17ம் சுலோகங்களிற் காண்கின்றோம். அதாவது மிதமிஞ்சி உண்பவனுக்கும் உறங்குபவனுக்கும், அதற்கு நேர்மாறாக மிதமிஞ்சி உபவாசமிருப்பவனுக்கும் விழித்திருப்பவனுக்கும் சமத்துவ யோக நிலை கிட்டாது என்பதும், எல்லாவற்றிலும் அளவுடன் இருப்பவனே யோகத்தால் துயரை விலக்கமுடியுமென்பதுமாம்.

இந்த இடத்தில் அர்ச்சுனன் கேட்கும் இரு வினாக்கள் ஆத்மீக வாழ்வில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் உள்ளத்திலும் தவறாமல் எழுவனவாகும். முதலாவது கேள்வி, உபதேசிக்கப்பட்ட சமத்துவ யோகநிலையை அடைய முடியாது தடுக்கும் மனச் சஞ்சலத்தையும் குழப்பத்தையும் பற்றியது. இரண்டாவது கேள்வி முயற்சிக் குறைவால் தவறி வீழ்ந்த யோகியின் கதியைக் குறித்தது. இரண்டிற்கும் பகவான் தரும் விடைகள் சாதகர்கட்குச் சாதகமாய் வரும் சோர்வையும் சந்தேகத்தையும் நீக்கி உற்சாகமும், உறுதியும், நம்பிக்கையும் தருவனவாகும். மனம் நிலையில்லாத குணமுடையது என்பது உண்மையே. அதை அடக்குவது மிகவும் கஷ்டமான காரியம் என்பதும் உண்மையே. எனினும் நீண்ட இடைவிடா அப்பியாசத்தினாலும், வைராக்கியத்தினாலும் அதை வசமாக்க முடியுமென்கிறார். நல்வழி நடப்போர் இழிவடையார். ஒரு பிறப்பில் யோகநிலையில் தவறினால் மறுபிறப்பில் ஞானமுடைய குலத்திற் பிறந்து, பூர்வ ஜன்ம வினைப் பயனான நல்லறிவு கூடி, பின்னரும் பழைய யோகவழியில் இழுக்கப்படுவார்களென்று உறுதி மொழி கூறுகிறார்.

கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களையும் ஒன்றாகக், அந்தப் பாகத்தைக் கர்மயோக ரகசியமென அன்றுக்கலாமென முன்னர் கூறினேன். இந்த முறையில் ஆறாயான எடுத்தாண்ட 4-ம் 5-ம் 6-ம் அத்தியாயங்களை முறையும் ஒழுங்கும் விளக்கின, வேதாந்த விபரிக்கப்பட்டவைகள் கர்மயோகம் என்பதே இப்பாகத்தின் சாராம்சமெனக் கூறிவிடலாம், காலத்துக்கு மிகவும் பொருத்தமான இந்த அற்புத விளக்கத்தை ஸ்ரீ ராஜாஜி அழகாய்த் தந்துள்ளார், குறிக்கப்பட்ட மூன்று அத்தியாயங்களி லடங்கிய மொத்தம் 118 சுலோகங்களிலிருந்து கருத்தாழமுடையவுள்ள பத்துச் சுலோகங்களை மாத்திரம் தெரிந்தெடுத்து, எவ்வித்தத்தில் கர்மயோகம் சேவையுமாகும் என்பதை[illegible]

...ளார். எந்த வேள்விக்கும் முக்கிய அம்சம் தியாகம், எனவே ஆசையையுஞ் சுயநலத்தையும் விடுவதே வேள்வியின் சாரமாகின்றது. ஆகையால், பலவிதத்தில் செய்யக் கூடிய தெய்வப்பணி யெல்லாம் வேள்வியாகி விடுதலை தரக்கூடும்.

செய் முதலிய திரவியங்களில்லாமல், ஞானம் என்ற பொருளைக் கொண்டு செய்வது ஞானவேள்வி. எக்கருமஞ் செய்யினும் அக்கருமத்தின் பலனைப்பற்றிய சிந்தனையில்லாமல், மனம் சமத்துவ நிலையிலிருப்பதே ஞானம். இச்ஞானம் வைவரவில்லா வித வேற்றுமையுணர்ச்சியும் மறைந்து போகின்றது. சகல சீவன்களிலும் தமது ஆத்மாவிற்பதைக் காண்கின்றோம்; அப்படியே எல்லாச் சீவன்களும் பரமாத்மாவில் அடங்கி நிற்பதையும் காணலாம். இந்தக் காட்சிகள் தெளிவாகத் தென்படவே, பற்றறப் பணிசெய்வதும் சகசமாய்விடுகின்றது. கருமஞ்செய்யும் யோகமும் பரிசுத்தமாக மாறவே, கருமபந்தம் மாறுகின்றது; பூரண ஞானம் சித்திக்கிறது. இந்த ஞானத்தைப் பெறுவதும், அறிவு வழியேவது, புலன்களை அடக்கும் வழியேவது, சந்நியாசம் வேறு கர்மம் வேறு என்ற வேற்றுமைகள் ஒழிகின்றன. ஞானமும் கர்மமும் சேர்ந்தால், கர்மயோகமென்ற அரிய உண்மை உதயமாகும். இதுவே ராஜாஜி கண்ணன் காட்டிய வழியே வாழ்க்கையை நடாத்திச் சென்றுகண்ட நிஷ்காமிய கர்ம தத்துவமாகும்.

## உண்மையான சுயராஜ்யம்

சாதாரண மனிதன் வாழ்க்கைக்கு வேண்டியனவல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும். ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று ஒவ்வொருவரும் உணரவேண்டும். இந்த நிலைமைதான் உண்மையான சுயராஜ்யம் என்று காங்கிரசின் பொதுக் காரியதரிசியான கலா வெங்கடராவ் அம்பாலா நகரில் ஒரு பொதுக் கூட்டத்திற் பேசியிருக்கிறார். மகா யுத்த சமயத்தில் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தில் முப்பது லட்சம் மக்கள் வரை மாண்டு போனார்கள். அது அந்தக்காலம் ஆனால் இப்பொழுது பத்துப்பேர் பஞ்சத்தால் மடிந்துபோனாலும் நாட்டு மக்கள் மந்திரிகளைத் தூக்கிப் போட்டுவிடுவார்கள் என்று அவர் சொன்னார்.

## புகைரதப்பகுதியார் சிந்திக்க வேண்டும்

### புகைரதப் பிரயாணியொருவர் தெரிவிக்கின்றார்

'சென்ற வெள்ளிக்கிழமை 25-2-49 காலை எட்டுமணிக்குப் பளையிலிருந்து யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை சென்ற புகைரதத் தொடரில் மூன்றும் பின்னுமான பெட்டிகளில் மீன்காரிகள் துர்நாற்றமுள்ள மீனைக் கடகங்களில் வைத்துக்கொண்டு இருந்ததால் அடுத்துள்ள நாலு பெட்டிகளிலேயே பிரயாணிகள் ஒதுங்கி நெருங்கியிருக்க நேரிட்டது. அதுவன்றியும் இருபக்கத்தாலும் துர்நாற்றம்வீசியது; அதைப் பொறுக்க முடியவில்லை. அவர்களை ஒருபக்கமாக ஒதுக்கிவிடலாமெனச் சிலர் முயன்றும் வாய்க்கவில்லை; இவர்களைப் பிரத்தியேகமான பெட்டிகளில் ஏற்றிவிடக்கூடாதா? புகைரத அதிகாரிகளும் இதைப்பற்றிக் கேட்பாருமில்லை; பார்ப்பாருமில்லை. அவர்கள் இனியேனும் இதைப்பற்றிச் சிந்தித்துப் பிரயாணிகளுக் காகவேண்டிய ஒழுங்குகளைச் செய்வார்களா?"

## இலங்கை வானொலித் தமிழ்க்கலை மன்றம் முத்தமிழ் விழா

வருகிற மார்ச் மாதம் 4, 5, 6 ஆம் திகதிகளாகிய வெள்ளி சனி ஞாயிறுக் கிழமைகளில் வெள்ளவத்தை சைவமங்கையர் வித்தியாலய மண்டபத்தில் டி மன்றத்தினரால் முத்தமிழ் விழாக் கொண்டாடப்பெறும். அமைச்சர் உயர்திரு. க. சிற்றம்பலம் அவர்கள் விழாவினை ஆரம்பித்து வைப்பார்கள். முதனாள் மன்றத் தலைவர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் B. A (Hons), B. O L. அவர்களும், இரண்டாம் நாள் திரு. சி. க. இராசலிங்கம் B. A. அவர்களும் மூன்றும் நாட்காலை திரு. க. ச. அருணந்தி M. S C அவர்களும், மாலை திரு. கனகரத்தினம் M. P. அவர்களும் தலைமை தாங்குவார்கள். 'கலையும் அதன் பயனும்' என்பதுபற்றி திரு. சோ. நடராசா B. A. (Hons) அவர்களும், 'ஒரு நாடகம்' என்பதுபற்றி திரு. அ. வி. மயில்வாகனம் B. A. B. S. C. அவர்களும் 'ஆசையால் இசைகொண்ட தமிழ்' என்பதுபற்றி ஸ்ரீமதி மகேசுவரி மகாதேவன் B. A. (Hons) அவர்களும் 'கலைச் சொல்லாக்கம்' என்பது பற்றி பண்டிதர் திரு அ. சிற்றம்பலம் அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள், மூன்றும் நாளும் இசை, நாடகக் கச்சேரிகள் பல சிறப்பாக நிகழும் என அறியலாமேனும்.

## உ
## தோத்திரம்

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராணுலும் நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கும் மேலான பேர்.

கல்லாராலும் தரிசனஞ் செய்தற்கரியதான திருவண்ணாமலையை நன்கு சுற்றிக் கும்பிட்டு அங்கே கோவில்கொண்டருளிய பெருமானுருக்கு அடிமைப் பட்டுள்ளவர்கள் உயர்குலத்திற் பிறந்திலாராயினும் (தாழ்ந்த சாதியினராயினும்) ஈதலாகிய இயல்பில்லாதவராயினும் கல்வியறிவில்லாதவராயினும் பெரியவர்களெனச் சொல்லப்படுவோ ரெவருக்கும் மேலானவர்களாவார்கள் என்பது பொருள்.

ஆனாலும் என்பதைக் குலமில்லார் குணமில்லார் என்பனவற்றோடுங் கூட்டிப் பொருள்கொள்க. உயர்குடிப்பிறப்பு ஈகை கல்வியறிவு என்னும் நன்மைகளில்லாதவராயினும் அருணகிரியை இனிது சுற்றிக்கும்பிட்டு அண்ணாமலையப்பனுக்கு ஆட்பட்டொழுகுவோர் உலகிலுள்ள பெரியருக்கும் பெரியராய் மதிக்கப்படுவரென்பதாம். (26)

## 83 வயதிற் கல்யாணம்

எண்பத்து மூன்று வயது சென்ற டாக்டர் டேவிட் ராபர்ட்ஸ் என்ற லண்டன் வாசி ஐம்பது வயது தமக்கு இளையவளான ஒருத்தியை நான்காவது மனைவியாகக் கொண்டிருக்கிறார். இந்த டாக்டர் மது அருந்துவதில்லை, புகைக் குடிப்பதில்லை. வெள்ளாட்டுப்பால் அருந்துவதாலேயே தாம் இளமையோடிருப்பதாக அவர் கூறுகிறாராம்.

## அரசியலிற் கண்ணோட்டம்

( வரணி, திரு. ஆ. சின்னையாபிள்ளை )

(முற்றொடர்)

இவ்வாறு கண்ணோடிப் பயில்வது காரணமாக முறை தவறுமோ எனின்? தவறான் எனக. "கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு, உரிமையுடைத் திவ்வுலகு" எனவே முறை செய்தலாகிய தத்தொழில் எழியாமற் கண்ணோடல் வேண்டும் என்பது பெறப்பட்டது. முறை செய்தலாகிய தத்தொழிலழிதலாவது தன்னொடு பயின்றார்க்கு அதிக பண்பாடும் அல்லார்க்கு அஃதின்றியும், தன்னொடு பயின்றார் குறை செய்தவழி அதனைக் குறைக்கேற்றவாறு தண்டியாமையும், பயிலாதார் குறை செய்தவழி குறைபாட்டின் மிக்கதாய்த் தண்டித்தும் ஆகும் தன்மை. இஃது கண்ணோட்டம் காரணமாக அரசனிடத்தமைந்த அன்பும், அருளும் பயிலாதார் மாட்டும் அவ்வாறேயாய் எவர்க்கும் துன்பம் தாராத நெறியில் நன்மை பயப்பதான முறை செய்வதால் இலாதொழியும். இனித் தம்மொடு பயின்றார் ஒரோவழித் தனக்கே துன்பந்தரும் செயல்களைச் செய்தனராயின் கண்ணோட்டங் காரணமாக (அன்பும் அருளுங் காரணமாக) அதனைத் தான் பொறுத்தமைதல் கொள்வான். அதனையே வள்ளுவனார் "ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடி, பொறுத்தாற்றும் பண்பே தலை" என்றும் அழகாகக் கூறியுள்ளார். அன்றியும் இக் கண்ணோட்டத்தினையே நாகரிகம் என்கிறார் வள்ளுவனார். கண்கண்ட உலகத்தின் இயக்கப்பாட்டின் உயர்வான சிறப்பு, அழகு கண்ணோடிப் பெறும் அந்நாகரிகம். எப்படியென்று பார்ப்போம்.

வள்ளுவர்பெருமான் கண்ணோட்டமாம் நாகரிகத்தை அரசனமேல்வைத்துக் கூறியுள்ளார். ஏன்? அரசனின் இயக்கத்திலேயே உலகம் இயங்குக்கொண்டு காட்சியளிக்கிறது. "அரசன் எவ்வழிக் குடிகள் அவ்வழி" என்ற முதுமொழியும் ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. அரசன் கண்ணோட்டத்தாற் பெற்றுக்கொண்டதும், இயல்பாகவே எல்லாரிடத்தும் ஒரு தன்மைத்தாய்ப் பரந்து விளங்குவதும் ஆய அன்பும் அருளும் உடைமையாகிய நாகரிகம் அமையப் பெற்றதனால், அன்னவன் முறைதிறம்பாது ஓம்பி உலகத்து மன்னுயிரின் நலன்களைப் பாதுகாப்பான். அவ்வாறே அரசனின்கீழ் அமைந்த பலப்பல துறைகளுக்கும் பலபல தலைவர்கள் அவ்வவற்றிற்கு அரசராவர். எனவே, அன்னவரும் அவ்வத் துறைகளில் இழுக்குறாவண்ணம் தம்முறைமையைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். எனவே, அவர்கள்மாட்டும் அரசனுக் கமைந்த பொதுவான அன்பும் அருளும் இருத்தாகவேண்டும், இருக்கவே அரசனின் எண்ணப்படி அத்துறைகள் அவ்வத் தலைவர்களால் முறைஓம்பப்பெற்று உயர்வடையும். அரசனுக்குக் கீழ் அமைந்த தலைவர்களிடத்துக் கண்ணோட்டம் இன்றாயின், அவர்களிடத்து அன்பும் அருளும் ஏது? அவையில்லையாயின் அரசனின் எண்ணப்படி ஆளுகை நடப்பதெவ்வாறு? முறை ஓம்புமாறு யாங்ஙனம்? இனி, இவ்வாறு அரசனது ஆளுகை முறையின்றி பிரசைகளிலே முதலாளி தொழிலாளி எனத் தொழில் செய்விப்பவனும் தொழில் செய்பவனுமாக, உலகியல் காட்சியளிக்கிறது. ஆண்டும் முதலாளி அத்தொழிலகத்தில் அத்தொழிலாளிக்கு அரசனாகிறான். எனவே, அவன்மாட்டும் அக்கண்ணோட்டம் இருக்கவேண்டியதே. தொழிலாளியிடத்து அன்பும் அருளும் இருக்க வேண்டியதே. தொழிலாளியிடத்து அன்பும் அருளும் உடையனாதல் வேண்டும். தொழிலாளியை முறையோம்புதல்வேண்டும். இம்மட்டின் அரசநிலைமை முடிவடையவில்லை. மக்கட்கூட்டத்தில் தலைவன், தலைவி, பிள்ளைகள் என்ற அளவில் ஒவ்வொருகுடும்பமும் அக் குடும்பத்துறையில் அரசு நிலை பெய்துகின்றனர். அப்போது தலைவன் அக் குடும்ப காரியங்களுக்கெல்லாம் அரசு நிலைபெய்தி அரசன் ஆகின்றான். அவ்வாறே தலைவியும் அரசனுக்கு அரசியாகின்றாள். அன்னவர் மாட்டும் கண்ணோட்டம் தெழிற்படுகின்றது. எனவே உலகை ஆண்டு இயக்கும் அரசனை முதல் கடைசி தனித்த ஒரு குடும்பம் ஈறுக படிப்படியாய் அரசு நிலை அமைவதைக் கண்டு தெளிக. அவ்வாறாயின் அக்கண்ணோட்டம் அரசன் மேல் ஏற்றிக் கூறியதன்மையும் அது, நாகரிகம் உண்மையான அரசு நிலைகள் பங்குபெற முறையே முறை ஓம்பப் படுதலும் உலக இயக்கத்தில் ஓர் மேலான காட்சியை, அழகை, சிறப்பைத் தரும் வகையையும் ஆராய்ந்துணர்வார்க்குப் புலனும். இது வள்ளுவர் கண்ட சுபத் தக்க நாகரிகம்.

இதனை அறியாதார் நாகரிகம் என்று அநாகரிகமான மிருகத்தன்மையை நாகரிகம் என்று கொண்டாடுகின்றனர். மிருகங்கள் பிறவற்றை வருத்தியும் வருத்தாதும் தாம் உணவைத் தேடித் தம்மைப் பூர்த்தி செய்கின்றன. இவ்வாறே பிறருக்கு இடுக்கண் செய்தும் பிறர்படும் இன்னலை நோக்காதும் தாம் மாத்திரம் கண்டித்தனமாக உண்டும் உடுத்தும் இன்புற்றும் இறும்பூதெய்துகின்றனர். இதனையே நாகரிகம் என்றும் கருதுகின்றனர். இவ்வாறே எங்கள் ஈழ நாட்டின் அரசியல் நிலைமையும் அமைகிறது. ஈழ நாடு சுதந்திரமடைந்தது. இச் சுதந்திர அரசியலை தற்போது கொண்டு நடத்துபவர் பிரதமர் சேனநாயக்காவும் அவர் சகாக்களுமாவர். அவர்கள் என்ன நினைக்கிறார்கள்? ஈழநாடு முழுவதும் தங்களதிகாரத்தின் கீழ் வந்து விடவேண்டும். என்பதே அவர்களது சுய நலக் கருதும் மனப்பான்மையாகும். இவர்கள் இவ்வாறு கருதுவது அவர்களின் கண்மூடித்தனமான சுய நலப் போக்கை வலியுறுத்தும் இவர்களுக்குக் கண் இருந்தும் என்ன பயன்? "கண் இருந்தால் இரண்டு கண்ணும் சரியாக நோக்க வேண்டும்" என்னும் ஓர் முதுமொழியும் நம் தமிழ் நாட்டில் நிலவி வருவதைக் கவனியுங்கள்: அது கண்ணோட்டத்தினையே கருதுகின்றது. எனவே அன்னவர் கண்பெற்றும் புண்ணுடையோராவர். "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம், அஃதின்றேல், புண்ணென் றுணரப்படும்" என்கிறார் வள்ளுவனார். ஆதலின் மக்கள்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே,

# இந்துசாதனம்

யாழ், சர்வதாரி ௵ மாசி மீ கஅ உ செவ்வாய்க்கிழமை

## அங்கே அப்படி இங்கே இப்படி

எங்கள் தாய்நாடும் அயல் நாடுமாகிய இந்தியாவிற் பூரண சுயராச்சியம் பெற்ற நாள் தொடக்கம் பஞ்சமா பாதகங்களுட் கொடியதும் ஏனைய நான்கு மகாபாதகங்களுக்குங் காரணமாகவுள்ளதுமான மதுபானத்தை அத் தேசத்திலிருந்து அறவே அகற்றிவிடுதற்கான முயற்சிகளை இந்திய அரசினர்செய்துவரலாயினர்; பரீட்சார்த்தமாக இந்தியாவிலே சிற்சில ஊர்களிலும், மாகாணங்களிலும்மதுவிலக்குப் பிரமாணத்தை விதித்து மதுவை யொழித்து வருகிறார்கள்.

அடுத்த 1950-ம் ஆண்டு ஏப்ரல்மாசம் 1-ந் தேதி தொடக்கம் பம்பாய் மாகாணம் முழுவதும் மதுபானத்தை அறவே யொழித்தற்காகிய பிரமாணத்தைப் பம்பாய் அரசியல் நிர்வாகசங்கத்தார் இப்பொழுதே விதித்தற்காகிய பிரேரணைகளைச் செய்கிறார்களாம்; மேற்படி மாகாண மதுபரிபாலனப் பகுதி மந்திரியாகிய திரு. L. M. பற்றில் என்பவரே இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இதுதானும் மதுவிலக்கு விஷயமாக இந்தியாவில் அரசினரால் முதன்முதற்செய்யப்படும்பெருமுயற்சி; இந்த மது நீக்கப் பிரேரணையில் அபின் கஞ்சா முதலிய வெறிப் பொருள்களும் அடங்கும். இம்மதுபான நீக்கப் பிரமாணத்திற்குப் புறநடையுமுண்டு; மருந்துக்கும், கப்பல்களுக்கும், கடற்படை தரைப்படை முதலாம் இராணுவத்திற்கும், இன்னும் மதுபானம் இன்றியமையாததெனக் கண்ட சிற்சில கருமங்களுக்கும் மதுபானம் பெறுதற்கான உத்தரவுச் சீட்டுக்கள் முறைப்படி பிறப்பிக்கப்படுமாம். இப்படியான மதுவிலக்குப் பிரமாணத்தைப் பம்பாய் மாகாண அரசினர் விதிப்பதனால், அரசிறைவருவாயிற் பன்னிரண்டுகோடி ரூபாய் வருடந்தோறுங் குறையுமாம். இந்தக் குறைவை அரசினர் காலகதியில் வேறுவகையான வருவாய் செய்து ஈடுபடுத்துவார்களாம்.

பூரண சுயராச்சியம் பெற்றுள்ளதாகிய இந்தியாவின் விஷயம் அப்படியிருக்க, சுயராச்சியம் பெற்றதென்று சொல்லப்படும் இந்த இலங்கையில் மதுபான விஷயம் எப்படியிருக்கிறதென்றும், மதுபான விஷயமாக இலங்கைப் புதிய அரசினர் என்ன செய்கிறார்களென்றும் ஆராய்வோம்; இங்கே அரசினர் இங்குள்ள மதுபானிகளுக்கு இப்பொழுது விலைக்கு உதவப்படும் சாராயம் போதாதென்று இன்னும் அதிக சாராயத்தைத் தங்கள் பொறுப்பில் வடிப்பித்து இங்குள்ளார்க்கு உதவவேண்டுமென்ற நோக்கங் கொண்டுவிட்டார்கள்.

சீத்துவா என்னுமிடத்திலே சாராயம் வடித்தற்காகிய தொழிற்சாலை தாபிக்கப்பட்டபின் இலங்கையில் வருடந்தோறும் ஆக்கப்படும் சாராயத்தின் தொகை பத்து லட்சங் கலனாகுமாம்; முந்தி இங்குள்ள மக்களாற் குடிக்கப்பட்ட சாராயத்தின் தொகை இரண்டு லட்சங் கலனும். ஆனால் சென்ற 5 ஆண்டுகட்கிடையில் இத்தொகை ஒன்பது லட்சங் கலனாக அதிகப்பட்டுவிட்டதாம். இந்த ஒன்பது லட்சம் கலன் சாராயமும் அரசினர் அநுமதி பெற்ற சாராயம் வடிக்கும் 8 தொழிற்சாலைகள் மூலம் பெறப்படுவதாகும். அரசினர் சாராயத் தொழிற் சாலையிலிருந்தும் இரண்டு லட்சம் கலன் கொண்ட சாராயம் வடித்து விற்கப்படுகிறதாம். எனவே, 11 லட்சம் கலன் கொண்ட சாராயம் இப்பொழுது ஆக்கப்படுகிறதெனக் கணக்கிடலாகும்; இன்னும் சாராயத்தை இங்கே அதிகப்படுத்துதற்காகிய தொழிற்சாலையைத் தாபித்தற்கு எட்டு லட்சம் ரூபாய் வரையில் வேண்டுமென அரசினர் மதிப்பிடுகின்றனர்; இச் சாராயத்தை ஆக்குதற்கு வேண்டிய தென்னை கித்துள் முதலிய மரம் எத்தனையாயிரமென்பதும், மரமேறிகள் எத்தனை நூறுபேர் வேண்டுமென்பதும் திட்டமிடப்பட்டுள்ளன; ஆனாலரசினர் சுத்தமான சாராயம்வடித்துப்பிரசைகட்குஉதவவேண்டுமென்ற விஷயத்தில் அதிக சிரத்தை கொண்டுள்ளார்கள்; அதனோடு இயன்றவரைக்கு இலங்கை மக்களையே சாராயம் வடித்தற்றொழிலில் வேலை கொள்ள வேண்டுமன்றி அந்நிய நாட்டு மக்களைவேலைகொள்ளவொண்ணாதெனவும் உத்தேசித்திருக்கிறார்களாம். இதுதான் சுதந்திரம் பெற்ற இலங்கைக்குச் சுதந்திர அரசினர் இப்பொழுது செய்ய உத்தேசித்திருக்கும் பேருதவியாகும்.

பிரசைகளின் நன்மையை விரும்பும் அரசினர் எவராயினும் தம் நாட்டிலே மதுபானத்தை விருத்திசெய்யக் கருத்தில் வையார்கள். பூர்வ காலத்திலே எல்லா வகையான சீர்திருத்தத்தோடுங் கூடிய சீனதேசம் பாழடைந்தமை பிற்காலத்தில் ஐரோப்பியர் அங்குள்ள மக்களுக்கு அபின் என்ற அறிவை மயக்கும் வெறிப் பொருளைக் கொண்டுபோய்ப் புகுத்தி அத்தேசத்தவரை உண்ணச் செய்தமையினாலென்று சொல்வர். அரசினர் வருவாயை யுத்தேசித்து இலங்கை மக்களுக்குச் சாராயத்தை அருத்தப் புகுதல், பெற்றதாய் பிள்ளைகட்கு நஞ்சூட்ட முயன்றவாறாகும். ஒருவருடைய நல்லறிவைக் கெடுக்கும் விஷயத்திற் கள்ளுஞ்சாராயம் போற் பொல்லாதவை வேறொன்றுமில்லையாம். "கள்ளினு முளதுகொல் கருத்தழிப்பதே" என்று நம் முன்னோரும் பாடியுள்ளார்கள்; தமிழ்நூல்கள் இந்தச் சாராயத்தை "அட்டகள்" (அதாவது காய்ச்சப்பட்டகள்)என்று கூறியுள்ளன. "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந் திருநீக்கப்பட்டார் தொடர்பு" என்று மதுபானம் எக்காலத்துமுள்ள மக்களுக்குத் தரித்திரத்தைத் தேடிவிடுந்தன்மையதென்னுங் கருத்துப்படத் திருவள்ளுவரும் மதுபானத்தைப் பெரிதுங்கண்டித்துள்ளார்.

இந்த இலங்கையிலே இப்பொழுது அதிகப்பட்டு வருங் கொலை களவு விபசாரம் முதலாங் குற்றங்களுக் கெல்லாம் பிரதான காரணம் மதுபானமேயென்று பொலிஸ் பகுதியார் காலந்தோறும் தம் பரிபாலன அறிக்கையிலும், அபிமானிகள் பத்திரிகை வாயிலாகவும் வெளியிட்டு வருகின்றனர். இவற்றைக் கண்டுங் கேட்டும் அரசினர் வெட்கமின்றி இன்னமும் மதுபானத்தை விருத்திபண்ண நோக்கங்கொண்டுள்ளனர்; வேலி பயிரை மேயத் தலைப்பட்டாற் செய்வதென்ன? ஆனாலும் ஒருகருமஞ் செய்யலாகும்; இந்த இலங்கையில் வாழும் சமய வாதிகள் பௌத்தர், சைவ சமயத்தவர் இஸ்லாமியர், கிறிஸ்தவர் என நான்கு பகுப்பினராவர். இந் நாற்பாலாரும் அநுசரிக்கும் நால்வகைச்சமயங்களும்மதுபானத்தைக் கண்டித்து விலக்கும் இயல்பின; ஆதலால் மதுபானத்தை அறவே யொழிக்கும் விஷயத்தில் இந்நான்கு சமய மக்களும் முயற்சி செய்தல்வேண்டும்; அங்ஙனஞ் செய்தாற்றான் இலங்கை, இந்தியாவைப் பின்பற்றி ஈடேற இயலும்.

---

### எஜமானனைப் புலியிலிருந்து காத்த நாய்

காசிராம் என்னும் வாலிபன் நாகப்பூர்க் காட்டிற்சென்று விறகு வெட்டிச் சீவனஞ் செய்பவன்; அவன் அந்தக் காட்டில் விறகு வெட்டப் போகும்போது தான் வளர்க்கும் நாயையும் உடன் கூட்டிச் செல்வது வழக்கம்; சென்ற வாரம் ஒருநாட் காலையிற் காசிராம் ஒரு அடர்ந்த பற்றையின் அயலே சென்று விறகு வெட்டும்போது, அப் பற்றைக்குள் இருந்த புலி அவன் மேற் சீறிப் பாய்ந்து அவனைத் தாக்கியது. தன் எஜமானனைப் புலி தாக்குவதைக் கண்ட அந்த நாய் உடனே புலி மேற் பாய்ந்து அதனைத் தாக்கி அதன் உதிரமாமிசத்தைக் கடித்து இழுத்துப் புலியை ஊறுபடுத்தத் தொடங்கியது; இதனாற் புலி வேதனையுற இதற்கிடையில அந்த வாலிபன் தன் திகைப்பு நீங்கித் தைரியத்துடன் புலியிலிருந்து தன்னைத் தப்புவித்துக்கொண்டு தரையிற் சிறிதுநேரம் உருண்டான்; நாயின் குரைப்பையும் வாலிபனிட்ட ஓலத்தையுங் கேட்டு, அயலில் நின்ற விறகு வெட்டிகள் சிலர் ஓடிவந்து, தங்கள் கோடரிகளினாற் புலியைக் கொத்திக் கொன்று வாலிபனையும் நாயையும் மீட்டார்கள்.

---

### திருவள்ளுவர் தினம்

சென்றசெவ்வாய்க்கிழமை (15-2-49) பிற்பகல் 6 மணியளவில் மேற்படி தினவிழா நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய வாசிகசாலை மண்டபத்தில் வாசிகசாலையாரின் அநுசரணையில ஸ்ரீ மு. வேலாயுதபிள்ளை ஆசிரியர் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது பின் திருவள்ளுவர் படத்திற்கு விசேஷ பூசை நடைபெற்றது. பின்னர் தலைவர் அவர்களால் "திருவள்ளுவர் சரித்திரம்" பேசப்பட்டது. அதன்பின்பு மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித வகுப்பு ஆசிரியரும் தொண்டித்திய சிவயோகத் திருக்கூட்டப் பிரசாரகருமாகிய பண்டிதர் திரு தா. முருகேசபிள்ளை அவர்களால "தெள்ளிய தமிழின் வள்ளுவர் அமிர்தம்" என்னும் விஷயம்பற்றி பேசப்பட்டது ஈற்றில தலைவர் முடிவுரையுடனும் காரியதரிசியின் நன்றியுரையுடனும் தேவாரபாராயணத்துடனும் 10 மணியளவில் விழா நிறைவேறியது.

---

சிவநெறிச் சிறு கதை

## சாந்திகன் சரித்திரம் I

### உருத்திராக்கத்தின் பெருமையை உணர்த்துவது

(புகலியர்கோன் எழுதுவது)

மாசம் என்னும் பெயருடைய நாடொன்றுண்டு; அந்த நாட்டிலே ஆகாரம் என்னுமொரு பட்டினமுளது; அப் பட்டினத்திலே சுபுத்தன் என்றொரு பிராமணன் இருந்தான்; அச்சுபுத்தனுடைய மக்கள் ஐந்துபேர்; அவர்களுள் இளையவன் பெயர் சாந்திகன்; சாந்திகன் சின்ன வயசிலேயே கடவுளிடத்திற் பற்று, பொறுமை, முதலிய நல்ல குணங்களோடுஞ் செயல்களோடுங் கூடியவனாயிருந்தான்.

சாந்திகன் சிறுபிள்ளையாயிருக்குங் காலத்தில் ஒருநாள், தெருவிலிருந்து மணலைக் குவித்து விளையாடிக்கொண்டு இருக்கும்போது அந்த மணலுள் ஒரு உருத்திராக்க மணி கிடக்கக்கண்டு, அதனை விருப்புடன் எடுத்தான்; உடனே தான விளையாடுவதை விட்டு, அந்த உருத்திராக்க மணியைத் தன் வீட்டிற் கொண்டுபோய், ஒரு நூலை அந்த மணியின் துவாரத்திற் கோத்துத் தன் கழுத்திலே கட்டிக்கொண்டான். சாந்திகன் பின்னரும் விளையாடிக்கொண்டு நிற்கத்தானேயல்லாமல், தனனுடைய தகப்பன் தமையன்மார் என்னுமிவர்களுடன் கூடிக்கொண்டு தானம் வாங்குதற்குப் போகமாட்டான்; அவர்கள் சொல்வதைக்கேட்கவும்மாட்டான்; இதனால் அவனுடைய பெற்றாரும் உடன் பிறந்தாரும் அவன்மேல் வெறுப்படைந்தார்கள்.

சாந்திகன் இப்படியிருக்குங்காலத்தில், கோசல நாட்டை யாண்ட ஒரு அரசன் தான் வழிபடுங் காளிக்கு நரபலி கொடுக்கவேண்டுமென எண்ணங் கொண்டான்; அந்த அரசன் தனக்குப் புரோகிதனாகவுள்ள பிராமணனைக் கூப்பிட்டுத் தனது நோக்கத்தை அவனுக்குச் சொல்லி, பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து "அங்கக் குறைவு ஒன்றுமில்லாத அழகிய ஒரு சிறுவனைப் பணங்கொடுத்து வாங்கிவா" என்று கூறி, அப் புரோகிதனுக்குத் துணையாகத் தன்னிடத்துள்ள ஏவலாளர் சிலரையும் அனுப்பினன். ஏவலருடன் புறப்பட்ட புரோகிதன், "அங்கக் குறைவில்லாத அழகிய சிறுவன் எங்கேனுமுண்டோ என்று தேடிப்பார்த்து, எனக்கு வந்து தெரிவியுங்கள்" எனச் சொல்லித் தன்னுடன் வந்த ஏவலரை அயலூர்தோறும் போகும்படி ஏவினன். புரோகிதன் பணித்தபடி ஏவலர் ஊர்தோறுஞ் சென்றார்கள்; அவர்களுள் ஒருவன் மாகத நாட்டிலுள்ள ஆகாரம் என்னும் பட்டினத்தை யடைந்தான்.

அப்பட்டினத்திலே அந்த ஏவலன் எங்குஞ் சுற்றிப் பார்த்துப் பிராமணர்வாழும் வீதியைச் சேர்ந்தான்; அங்கே சுபுத்தனென்னும் பார்ப்பான் நிற்கக் கண்டு, அந்த ஏவலாளன் அவனிடம் போய், "போதிய பணந் தரலாம்; அங்கக் குறைவில்லாத அழகான ஒரு பிள்ளையை விலைக்கு வாங்கித்தர இயலுமோ" என்று இரகசியமாகக் கேட்டான், கேட்டவுடனே சுபுத்தன் பெருங் கோபங் கொண்டானாய், "ஏ, மூடா, இப்படியான அடாத பேச்சை இந்த அந்தணர் வீதியில் வந்து பேசியது பெரும்பழியாகும்; வீண் வார்த்தை பேசாதே உயிர் தப்பவேண்டுமானால் ஓடிப்போ" என்று அதட்டிப்பேச, ஏவலன் மெல்ல அந்த இடத்தை விட்டுப் போய் புரோகிதனுக்கு நடந்த செய்தியைச் சொன்னான்.

கேட்ட புரோகிதன் சிரித்துவிட்டு, அந்த ஏவலருடன் ஆகாரம் என்னும் பட்டினத்திற் போய், அங்குள்ள மறையவர் வீதியையடைந்தான்; ஏவலன் சுபுத்தனைப் புரோகிதனுக்குக் காட்ட, புரோகிதன் அச்சுபுத்தனை மெல்லக் கூப்பிட்டு, "ஐயரே, நான் உமக்குப் பொன் முழுவதையும் உமக்கே தருவேன்; நீர் அங்கக்குறைவு சிறிதுமில்லாத அழகிய ஒரு சிறுவனைத் தேடிக்கொண்டுவந்து என்னிடம் ஒப்புவிப்பீரா" என்று கேட்டான். பொன்னைக் கண்ட பிராமணன் யோசிக்கின்றான்: "ஒரு பெரிய தேசத்தைக் காப்பதற்காக, ஒரு நாட்டைக் கைவிடலாம்; ஒருநாட்டின் நன்மையையுத்தேசித்து, ஒரு நகரத்தை இழக்கலாம்; ஒரு கிராமத்தின் பொருட்டு அக் கிராமத்திலுள்ள ஒரு குடியை இழக்கலாம்; ஒரு குடியின் நன்மையைக் கருதி, அக்குடியிலுள்ள ஒரு பிள்ளையைக் கைவிடலாம் என அரசநீதி கூறுகிறது. நீடித்த காலமாக எங்களை வாட்டும் வறுமையோ சகிக்கமுடியாதது; என்மக்கள் ஐவருள் இளையவனாகிய சாந்திகனோ சொற்கேளாதவன்; விளையாடித் திரிபவன்; அவனை வைத்து வளர்ப்பதால் இப்போதைக்கு நாம அடைக்கூடிய நன்மை ஏதுமில்லை: அவனை இப்புரோகிதனுக்குக் கொடுத்து இப்பணம் முழுவதையும் பெற்றுக்கொண்டால் நானும் என் மனைவி புத்திரர் நால்வரும் மகளிரும் உள்ளளவும் எவ்வகையான குறையுமின்றி இனிது வாழலாம்; இதுதான் செய்யத்தக்கது" என்று நினைத்தான் அந்தக் கனமனப் பார்ப்பான்.

அப்படி அடாத கருமத்தைச் செய்யத் துணிந்த சுபுத்தன், அப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

---

### தமிழ் மந்திரிக்கு உபசாரணை

கைத்தொழிற்பகுதி மற்சவிருத்திப்பகுதி மந்திரியாகவுள்ள திரு. G. G. பொன்னம்பலமவர்கட்கு, சென்ற சனிக்கிழமை (26-2-49) யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள நகரசபை மண்டபத்தில் யாழ்ப்பாணப்பகுதி மக்கள் உபசாரணை நடத்தினர்; வண்ணார்பண்ணை நாவலர் கலாசாலைச் சந்தியிலிருந்து மந்திரியாரை மேளவாத்தியத்தோடு மேற்படி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். மிஸ்டர் S. M. அபுபக்கர் காரியவர்கள் மாலையிட்டனர்; நகரசங்கத் தலைவராகிய திரு. சாம். A. சபாபதியவர்கள் வெள்ளியுறையுள் வைக்கப் பெற்றதாகிய வந்தனோபசாரப் பத்திரத்தை வாசித்தார். திரு. G. G. பொன்னம்பலமவர்கள் தமக்குச் செய்த உபசாரணையின் பொருட்டு நகரசபைத் தலைவருக்கும் அங்குச் சமூகமாயிருந்த மேற்படி சபை வட்டாரப் பிரதிநிதிகட்கும் நன்றிகூறும்போது, மந்திரியென்ற முறையில் தாம் செய்ய வுத்தேசித்திருக்கும் சில நன்மைகளைத் தொகுத்துச் சொன்னார்; யாழ்ப்பாணம் நகரபரிபாலன சபையோடு தாம் எந்நேரமும் ஒத்துழைக்கச் சித்தமாயிருப்பதாவுங் கூறினார். ஆனால் குறித்த உபசாரணைக் கூட்டத்தில் மேற்படி சபைப்பிரதிநிதிகளெழுவர் சமூகஞ்செய்யாதொழிந்தனர்.

---

## :: வானவில் ::

● கலாமந்த்ரன் ●

○ சர்தார் வல்லபாய்படேல் இரும்பு மனிதன் எனப் பெயர் பெற்றவர். அவர் வேடிக்கையான பொழுது போக்குகளிலோ அல்லது தமாஷ்களிலோ ஈடுபடுவது கிடையாது. ஆனால் சமீபத்தில் அவர் ஒரு வேடிக்கைச் சண்டை நிகழ்த்தினார். சென்னைக்கு அவர் சமீபத்தில் வந்திருந்தார் அல்லவா? அப்போது சென்னை குஜராத்தி மண்டலத்தார் அவருக்கு ஓர் வரவேற்பும் அளித்து, 40,763 ரூபா கொண்ட ஒரு பண முடிப்பையும் அளித்தார்கள். அந்தப் பணமுடிப்பை மகாத்மா காந்தி ஞாபகார்த்த நிதிக்குச் சமர்ப்பிக்கும்படி தமிழ்நாடு ஆந்திர காங்கிரஸ் கமிட்டியிடம் கொடுக்கும்படி சர்தாரை அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

சர்தார் உடனே என்ன சொன்னார் தெரியுமா? "நல்லது ஐயா அப்படியே செய்கிறேன். ஆனால் நான் செய்யும் வேலைக்குத் 'தரகு' எங்கே?" என்றாராம்.

இரும்பு மனிதனின் வேடிக்கை எப்படி?

○ மந்திரியார் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்குச் சென்ற வாரத்தில் யாழ்ப்பாண நகரசபையினர் ஒரு வரவேற்பளித்து உபசரித்தனர். உபசாரணைக் கூட்டத்திற்குத் தமிழ்க் காங்கிரஸ் பக்தர்கள் பிரசன்னமாகத் தவறவில்லை, ஆனாலும் அவர்களின் தொகை என்னவோ எண்ணக்கூடியதாகவேயிருந்தது. "முழுமனத்தோடு நகரசபையினர் அளிக்கும் உபசாரணையால் நான் மனமகிழ்கிறேன்" என்று மந்திரியார்சொன்னபோது கூட்டத்தில் நின்ற ஒரு ஜனநாயகவாதி, "தவறு, முழு மனத்தோடு அரை நகரசபையினர் அளிக்கும் உபசாரணையல்லவா, இது?" என்று வெளிப்படையாக, சாதாரணமாகவே சொன்னாராம்!

○ சுதந்திரம் என்பதிற்குப் புதிதாய் முளைக்கப்போகிற அகராதிகளில் என்ன அர்த்தம் தரப்படுமோ தெரியாது. ஆனால் சுதந்திரத்துக்குப் புதிய கருத்தைத் திணிக்கும் கைங்கர்யம் நடைபெறுகிற விசேஷத்தைக் காணும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிடைத்துக்கொண்டே இருக்கிறது. விசேஷ சீர்திருத்தங்களைச் செய்து, இலங்கைக் கல்விப் பகுதியை முன்னணிப்படுத்த முயலும் பதில் வித்தியாதிகாரி யவர்கள் சமீபத்தில் தமது 4-வது வயதில் இளைப்பாற உத்தேசித்துள்ளாராம். காரணம் பழைய கதை "நீ ஏசாவிட்டால் உன் அப்பன், பாட்டன் அல்லது சகோதரன் யாராவது என்னை ஏசியிருக்கலாம்" என்று கூறி ஆட்டுக் குட்டியைப் பசித்த ஓநாயின் நீதி முறைமை சென்ற ரீதியிலேதான், பதில் வித்தியாதிகாரி அவர்களுக்கும் நீதி செலுத்தப்படுகிறதாம்!

○ தேசிய உடை சம்பந்தமாக இந்திய அரசாங்கம், மாகாண அரசாங்கங்களுக்கு ஓர் அறிக்கை விட்டுள்ளது. இந்திய உத்தியோகஸ்தர்கள் எவராவது விசேஷ உபசாரணைகள் தேநீர் விருந்து முதலியவற்றில் பங்குபற்றும் போது தேசிய உடையையே அணியவேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது, ஆனால் இது கட்டாயமல்ல, விரும்பத்தக்கது.

○ இலங்கையின் பிரதமராக உள்ள சேனநாயகா ஐரோப்பிய உடையிலன்றி ஒருவர் கண்ணிலும் அகப்படுவதில்லை. உபாசகராக, தேசிய உடையுடன் புத்த விக்கிரகத்துக்கு புஷ்பபூசை செய்யும்போது, அவரைப் புகைப்படமெடுத்து பிரசுரித்திருந்தன கொழும்புப் பத்திரிகைகள். அதில் அவர் ஒரு உண்மைத் தேசிய வாதியாகவே காணப்படுகிறார். ஆனால், மகாத்மா காந்தியடிகளின் புனித அஸ்தி கரைக்கும்போதா அல்லது புதிய அரசாங்கத்தைத் திறந்து வைக்கும்போதோ அவர் காட்சியளித்தது ஐரோப்பிய உடையிலேதான்!

○ தேசத்தின் 'பிதா' வழிகாட்டுதலைப் பின்பற்ற நாட்டின் 'குட்டிப் பிதாக்கள்' தவறமாட்டார்கள் என நம்ப இடமுண்டா?

## பங்குனி மாச விசேஷ தினங்கள்

1ம் தேதி (14-3-49) திங்கள் பூரணை விரதம்
2ம் ,, (15-3-49) செவ்வாய் காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மை கோயில் கொடியேற்றம்.
5ம் ,, (18-3-49) வெள்ளி காரைக்காலம்மையார் குருபூசை
13ம் ,, (26-3-49) சனி பிரதோஷ விரதம்
14ம் ,, (27-3-49) ஞாயிறு தண்டியடிகள் நாயனார் குருபூசை
15ம் ,, (28-3-49) திங்கள் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயில் கொடியேற்றம்.
16ம் ,, (29-3-49) செவ்வாய் அமாவாசை விரதம்
18ம் ,, (31-3-49) வியாழன் இணுவில் சிவகாமியம்மை கோயில் கொடியேற்றம்
19ம் ,, (1-4-49) வெள்ளி திருக்கோணமலை பத்திரகாளியம்மை கோயில் கொடியேற்றம்
20ம் ,, (2-4-49) சனி காரைநகர் சிவன்கோயில், நல்லூர் கல்லாகாத சுவாமிகோயில், மூளாய் முத்துக்குமாரசுவாமிகோயில், கண்டி செல்வவிநாயகர் கோயில், கொழும்புபொன்னம்பலவாணேசுவரர் கோயில், கரைவெட்டியார்க்கரு விநாயகர் கோயில், பண்ணாகம் முருகமூர்த்தி கோயில், நெடுந்தீவு நடுக்குறிச்சிப் பிள்ளையார் கோயில், மானிப்பாய் அரசடிப்பிள்ளையார்கோயில் மகோற்சவ ஆரம்பம், கார்த்திகை விரதம்.
21ம் ,, (3-4-49) ஞாயிறு கேசநாயனார் குருபூசை
23ம் ,, (5-4-49) செவ்வாய் கணநாத நாயனார் குருபூசை
25ம் ,, (7-4-49) வியாழன் முனையடுவார் நாயனார் குருபூசை
28ம் ,, (10-4-49) ஞாயிறு பிரதோஷ விரதம்
29ம் ,, (11-4-49) திங்கள் பங்குனி உத்தரம்
30ம் ,, (12-4-49) செவ்வாய் பூரணை விரதம்

## திருமஞ்சனமும் அபிடேகமும்

(பிரம்மஸ்ரீ இ. ஞானசேகரக்குருக்கள்,

திருமஞ்சனமாவது, சுவாமிக்கு அபிடேகம் செய்யும் தீர்த்தம், இதனை எடுக்குமுறை பூசைபுரியும் அருச்சகர், அல்லது, பரிசுத்தராய சிவதீட்சைபெற்ற பரிசாரகர் சுவாமியிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு சுத்தமான குடத்தை எடுத்துத் திருக்கோயிலின்கண் அமைந்த கிணற்றிலும் பரிசுத்தமான தடாக நதிகளிலும் தீர்த்தம் எடுக்கலாகும்; கிணற்றல் தடாகம் விசேடம், அதனும் நதி விசேடம், அதிலும் தேவர்கள் உண்டாக்கிய தீர்த்தங்கள் விசேடம், ஆயினும் ஆலயத்திலுள்ள திருமஞ்சனக் கிணற்றில் செங்கையமுள்ள முதலிய தீர்த்தங்களைக் கலந்து வைத்துக் கொள்வதும் விசேடம்; தீர்த்தம் எடுக்கும் பாத்திரம் குடத்தைச் சுத்தஞ்செய்து, சுத்தமான வஸ்திரத்தினால் வடிகட்டித் தீர்த்தத்தை எடுத்துச் செல்லும் பாத்திரத்தை அடைந்து, சுவாமிக்கு வலதுபக்கத்தில் வைத்து செம்பிலும் செய்யப்பெற்றதாயும் வாயகன்றதாயும் உள்ளதான வாரியென்னும் சொல்லும் பெரிய பாத்திரத்தைச் சுத்தஞ்செய்து தீர்த்தத்தை அதில் நிறைத்து ஏலம், இலாமிச்சம்வேர், இலவங்கம், கருப்பூரம், பாதிரிப்பூ, தீவெந்தபலம், தாமரைப்பூ, கஸ்தூரி அலரிப்பூ என்னுமிவைகளை, வாசனையின் பொருட்டு இட்டு மூடிவைத்துக் காலத்துக்குக் காலம் உபயோகிக்க வேண்டியது. இனி, சூரியகிரண மில்லாத காலத்தில், அதாவது இராத்திரியில் தீர்த்தம் எடுக்கக் கூடாதென்றும், காலை சூரியன் உதித்தவுடன், எடுக்கும் தீர்த்தத்தை, சாயரட்சைவரைக்கும், சாயரட்சை சூரியன் அஸ்தமிக்குமுன் எடுத்த தீர்த்தத்தை மறுநாள் சூரியோதயம் வரைக்கும், உபயோகிக்கலாமென்றும், தேவப்பிரதிட்டா காலத்தில் பிராதக்காலத்தில் தீர்த்தத்தை எடுத்து வைத்து இராத்திரிக்கு உபயோகிக்க வேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது; இதுவன்றியும், இராக்காலத்தின் அந்தமாகிய சூரியன் உதிக்குமுன் ஐந்நாழிகை யினுள்ள காலம் உதய காலத்தைச் சேர்ந்த காலமாகும், சூரியனது கிரணங்கள் வெளியில் தோன்றுவிட்டாலும் அந்தரங்கத்தில், வெளிப்படத் தொடங்கிவிடும் என்பதாம்; ஆகையால் அந்தக் காலமும் தீர்த்தமெடுக்க உகந்த காலமாகும். இதுவன்றி இராத்திரி காலத்தில், அத்தியாவசியம் தீர்த்தமெடுக்க நேரிடின் தழலிய திபம்-அல்லது பொன் இவற்றுள் ஒன்றைத் தீர்த்தத்திற்காட்டி, தீர்த்தம் எடுத்துக்கொள்ளலா மென்றும் காரணாகமம் கூறுகின்றது.

இனி அபிடேகமுறையாவது, பொன் வெள்ளி செம்பு இவைகளாற் பசுவின் காதிபோலவும், நுனி ஈறு துவாரமுடையதாயுமுள்ள தாரை எனும், பாத்திரத்தால் அல்லது பாத்திர சங்கினாலும், துவாரமுடைய பசுவின் கொம்பின் நுனியாலும், தீர்த்தத்தை அள்ளி அபிடேகம் செய்யவேண்டும் அன்றி குடத்துடன் தீர்த்தத்தை அள்ளி அபிடேகித்தல் கூடாது, இதுவன்றியும் தீர்த்தத்தை வாளியாலள்ளிக் குடத்தினால் பாபுறலும் வாளியுடன் அபிடேகித்தலும் கூடாவாம். மேலும் அபிடேகஞ் செய்யும்போது, பதமைதாம் மயக்கமயம், முதலியவைகளைப பாராயணம் செய்தல் வேண்டும்.

அபிடேகப்போர், மூலமந்திர பஞ்சப் பிரம சடங்கங்களை யுச்சரித்துக் கொண்டும் இடை இடையே சுத்தநாதத்தால், அபிடேகித்தற் பாதியம் காட்டுதலதேணடும் கை இயந்திரத்தால் உண்டாவது என வெண்ணெயானவது, டகவின் செய்யாலாவது அபிடேகித்து அரிசிமா - மஞ்சள் மா செல்வி - முசலி மா என்னுமிவற்றுலும் - இளம் சூடான வெந்நீராலும், பஞ்சகௌவியத்தாலும் பஞ்சாமிர்தத்தாலும், முக்கனிப் பழம் கற்கண்டு செய் முதலியவை கொண்டுஞ் செய்யப்படல் வேண்டும்.

## தேகவியோகம்

பருத்தித்துறையைச் சேர்ந்த அல்வாய் வடக்கு வாசரும் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவரும் தமிழ், ஆங்கிலம், சோதிடம் ஆகிய கல்வித் துறையிற் சிறந்தவரும் முற்பகுதியில் (P. W D.) ஓவர்சியராகவும், பின்னர் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத்தில் தலைமையாசிரியராகச் சைவ சமயப் பற்றுடன் கடமையாற்றியவரும், தற்போது பதுளைக் கச்சேரியில் உதவிச் சிறப்பாகக் கடமைபார்க்கும் திரு. S. K. ஆழ்வாபிள்ளையவர்களின் மூத்த சகோதாரும் ஆகிய திரு S. K. அருணசலமவர்கள் சலகலயாகத் தம்மைப் பிடித்த நோய் காரணமாக 21-2-49 ல் தமது இல்லத்தில் மனைவி மக்கள் பேரப்பிள்ளைகள் பிட்டப் பிள்ளைகள் சகோதர சகோதரிகள் சுற்றமித்திரர் யாவரும் அன்புற இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடியை அடைந்தனர் ஈமக்கிரியைகள் அடுத்தநாட் காலை அவரது இளைய புதல்வியாற் செய்யப்பட்டன, அப்பெரியாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

**தானவரவு**

மேற்படியாருடைய அபரக்கிரியைப் போது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்குத் தானமாக வரித்தனுப்பிய ரூபா 3 வரப்பெற்றும். —மனேசர்

## சாந்தினன் சரித்திரம்

2ம் பக்கத் தொடர்ச்சி

புரோகிதனை நோக்கி, "ஐயா, உத்தப் பொன் முழுவதையுந் தருவிரானால், நீர் விரும்பியபடி உமக்கு ஒரு ஈறுவனை நான் தருவேன; ஆனால், இது இரகசியமாக இருத்தல்வேண்டும்; அயலார் அறிந்தாற் பழி நேரும்; எங்கள் அரசன் அறிந்தால் என்னுயிருக்கு ஆபத்தாகும்" என்று மெல்லச் சொன்னான்; புரோகிதன மகிழ்ச்சியோடு அதற்கு உடன்பட்டான்: புரோகிதனைச் சுபுத்தன தன் வீட்டினுட் கூட்டிக்கொண்டுபோய் இருக்கச் செய்தான; பின்பு தன் மனைவியையும் மக்கள் நால்வரையும் ஒருங்கு கூப்பிட்டுத் தனதெண்ணத்தை அவர்களுக்குமெல்லச்சொன்னான்; கேட்ட மனைவி முகில் முழக்கங் கேட்ட பாம்புபோற சோர்ந்து விழ்ந்தாள்; மக்கள் நால்வரும் கலக்கமடைந்தனர்; சுபுத்தன் மனைவியையும் மக்களையுந் தேற்ற முயன்றான: மனைவி தேறிலள; மக்கள் ஒருவாறு தேறினர்: பின்னர் மக்கள் நால்வரும் தங்கள் தாயைப்பார்த்து, "அம்மா, கவலைப்பட வேண்டாம்; எங்களை வருத்தும் பிடிபெனிலோ மிகக் கொடியது; அல்லாமலும் கணவனை சொல்லைத் தட்டுவது கற்புடைய பெண்களுக்கு அழகல்ல. ஆனதால் அப்பா சொல்வதைத் தட்டாதீர்கள்" என்று தேறுதல் சொன்னார்கள்; இப்படியெல்லாஞ் சொன்னாலும் தேறுள மனம் தேறுமா!

அதன்பின்னர்ச் சுபுத்தன் தனது இளைய மகனாகிய சாந்தினனைக் கூப்பிட்டு "குழந்தாய், பொல்லாத வறுமையினால் நாங்கள் படும்பாட்டை நீ அறிவாய்; இனிமேலும் இந்த தரித்திரத்தாலிருந்து இடர்ப்பட முடியாது. பெற்றோர் தளர்வுற்ற காலத்தில் அவர்களுக்கு உதவிசெய்வது பிள்ளைகளுடைய கடமையாகும்; அதிகம் சொல்வதென்ன, இனிமேல் என்னால் வறுமைப் பாழ்பிணி ஆற்றப்படாது! ஆதலால் உங்களில் ஒருபிள்ளையைப் பணம் வாங்கிக்கொண்டு இந்தப்புரோகிதருக்கு விற்க நோக்கங்கொண்டேன்; உன் தமயன்மாருள் ஒருவனை விற்பதா? இல்லையேல் உன்னை விற்பது உனக்குச் சம்மதா? உள்ளதைச் சொல்லு" என்று வாய் கூசாது கேட்டான்." சாந்திகன் தங்கள் தாயையும், தமயன்மாரையும் அவதானமாகப்பார்த்தான. (வரும்)

## கந்தபுராணக்கவி நுட்பம்

### விடைபெறு படலம்

[வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள் இப்[ ]பகரக்குறியிட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.]

அருத்தி கோள் குமரன் இளையசேசல் வினவி யப்பணி புரிகுவனென்னப்
புரத்திரை யட்ட கண்ணுதல் பின்னர்ப் போள்ளெனவுள்ளமேற் பதினோர்
உருத்திரர்தமையும் உன்னலும் அன்னோர்உற்றிட இவன்கையிற்படையாய்
இருத்திரேன் றவரைப் பலபடை யாக்கி யீந்தனன் எம்பிரான் கரத்தில்

சிவபிரான் அன்பு வைக்கப்பெற்றுள்ள குமாரக் கடவுள் இவ்வாசகத்தைக் கேட்டு அக்கட்டளையை நிறைவேற்றுவேன் என்று கூற, முப்புரங்களையெரித்த நெற்றிக்கண்ணை யுடையவராகிய சிவபெருமான் அதன் பின்னர் விரைவிலே தமது திருவுளத்திற பதினொரு உருத்திரர்களையும் நினைத்த மாத்திரத்தில், அவர்கள் கைலாசபதியின் சந்நிதியிலே வந்து நிற்ப (அவர்களை நோக்கி) இச்சுப்பிரமணியனுடைய கைகளிற் படைக்கலங்களாகி அமையக் கடவீர் எனப் பணித்து அவ்வுருத்திரர்களைப் பலவகைப் படைகளாக்கி எங்கள் தலைவராகிய முருகக் கடவுளிடம் கொடுத்தருளினார் என்பது கருத்து.

வலியான் மேம்பட்ட திரிபுரத்தசுரரைத் தமது நெற்றி காட்டத்து நெருப்பினாற் சாம்பராக்கிய சர்வ வல்லமை யுள்ள பெருமான், இச்சூரபன்மன முதலாம் அசுரரை அழிக்கு மாற்றல் தமயிடத்திருப்பவும், வரமளித்த தாம் அதற்கு மூராக அவர்களை அழிப்பது முறையன்றாதலின் அவ்வனஞ் செய்தலின்றி அச்சுசுரருக்குத் தமது இளைய திருக்குமாரர்மூலம் மறக்கருணை புரியத் திருவுளங் கொண்டாரென்னுங் கருத்துப் போதர "புரத்தினை யட்ட கண்ணுதல்" என்றார்: பேராற்றல் முதலியவற்றை வரத்தாற் பெற்ற சூரபன்மன் முதலானோரைச் சம்மாரஞ் செய்தல், ஏனைய தேவப் படைக்கலங்களுக்கு ஏலாதாகலின் சங்காரத்திற் உரியவர்களாகிய உருத்திரர்களைப் படைக்கலங்களாக்கிப் பெருமான் ஈந்தன ரென்க; இவ்வுருத்திரர் நாமங்கள் முன்னாக் கணங்கள்செல் படலத்திற் சொல்லப்பட்டன. பொள்ளென என்பது விரைவுக் குறிப்பை யுணர்த்துஞ் சொல்.

[அருத்தி கொள் குமரன் என்பதற்கு ஆன்மாக்கள் தம்மீது பாராட்டும் பத்தியை ஏற்றருளும் குமாரமூர்த்தி எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும்.] (36)

பொன்றிகழ் சடிலத்தண்ணற் பெய நம்பொருவிலா வுருவமுந் தோன்றுள்
நன்றுபெற் றுடைய வுருத்திர கணத்தோர் நவிலருந் தோமரங்கொடிவாள்
வன்றிற் குலிசம் பகழியங் குசமும் பணிமலர்ப் பங்கயம் தண்டம்
வென்றிவின் மழுவு மாகிற் றிருந்தார் விறன்மிகும் அறுமுகன் கரத்தில்

பொன்போல் விளங்குகின்ற சடைமுடியையுடைய சிவபிரானது திருநாமத்தையும் ஒப்பற்ற திருவடிவத்தையும் ஆதியில் இனிதடைந்துள்ளவர்களாகிய உருத்திரர் பதினொருவரும் (இப்படிப்பட்டன என்று) சொல்லுதற்கரிய தோமரம், கொடி, வாட்படை, திண்ணிய ஆற்றலோடு கூடிய குலிசப்படை, அம்பு, அங்குசம் மணி, தாமரைப்பூ, கதாயுதம், வெற்றிதரும் வில், கோடரிப்படை என வடிவமைந்து சண்முகமூர்த்தியுடைய திருக்கரங்களில் வலிமையுடன் பொருந்தியிருந்தனர் என்பது கருத்து.

அண்ணல் தன்பெயர் - உருத்திரனென்னும் நாமம்; இவ்வுருத்திர வடிவத்தை அசிபிரமேந்திராதி தேவர்களாக வேறு எவராக கொள்ளுதலியலாதெனபார் "பொருவிலாவுருவம்" என்றார்: தொன்று - சிருட்டி காலம், நன்று பெற்றுடைய என்பதற்குப் பூரணமாக அமையப்பெற்றுள்ள எனப் பொருள் கொள்ளலும் பொருந்தும்; குலிசம் - வச்சிராயுதம்; சூரபன்மனுடைய தம்பியாகிய சிங்கமுகனது தடவரையன்ன மார்பைக் கீண்டு ஊடுருவிச் செல்லுமாற்றலுடையதாதலில் குலிசமென வாளா கூறாது "வன்றிற் குலிசம்" என அடைகொடுத்துக் கூறினர்; இங்ஙனமே, சூரன் சிங்கன் தாரகன் முதலாம் அசுரர்கள் பிடித்த விற்போல, அரியயன் இந்திரன் முதலாத் தேவர்கள் கைக்கொண்ட விற்போல, ஏனைய வீரர் பரித்த விற்போல வெட்டுண்டு சிதைதல் முறிதலென்னும் ஊனங்களின்றி, முருகமூர்த்தியின் திருக்கரத்தில் உயிர்களின் பாசமறுக்க வெற்றிக்கு அறிகுறியாய் விளங்கும் வில்லென்பர் "வென்றிவில்" என்றார். "கொடி மணி பங்கயம் என்பன அவ்வவ் வடிவுடையனவாகச் செய்யப்பட்ட ஆயுதங்கள்" என அகலங் கூறுதல் அறவே பொருந்தாது: கொடி கொடிச்சீலை வடிவாகவே யமைந்துள்ளது. பதினொரு உருத்திரருள் ஒருவர் கொண்டுள்ள வடிவமாதலின பகைவரைக் கொல்லும் அக்கொடியுமென்க; கிரமிட்சி யுத்தத்தில் அர்ச்சுனனுடைய தேரிலுள்ள அநுமக்கொடியில் அநுமனே வியாபகமாகி அமைந்து அர்ச்சுனனுக்குப் பகைவரை வெல்லுமபடி துணைபுரிந்தானெனப் பாரதத்திற் சொல்லப்பட்டிருத்தலும் இதற்காதாரகும்; முருகவேளுக்குரிய கொடி சேவற்கொடியாயிற்றே, இஃதென்ன பிறிதோர் கொடியெனின் அற்றன்று, முருகக் கடவுள் எழுந்தருளும் மனோவேகப் பொற்றேரின் கூம்பில விளங்குவதே கோழிக்கொடி யெனவும், இது அப்பெருமானின் திருக்கரமொன்றில் உருத்திரரொருவர் வடிவம் மாறி அமைந்ததாகிய கொடியெனவும் பேதந்தெரிந்து கொள்க. மணி பங்கய மென்பனவும் அவ்வவ் வடிவமாகச் செய்யப்பட்ட ஆயுதங்களல்லவென்பதைக் கீழ்வரும் உரைக்குறிப்பா லுணர்ந்து கொள்க.

[தோமரம் - எறிவேல், இங்கே உருப்புலக்கையெனக் கொள்ளற் பொருந்தாது முருகமூர்த்தி திருக்கரத்தில அவ்வாயுதங் காணப்படாமையின; மணிபங்கயமாய ஆவைகளும் போர்க்குக் கருவிகளாகுமா, இவற்றைக் கொடுத்ததென்னையெனின், களவேள்வி செய்யும் போது ஒலித்தற்கு மணி கருவியாயும் அருச்சித்தற்குப் பங்கயமலர் கருவியாயும் பொருந்துமென்றற்க]. (37)

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

செவ்வாய் மார்ச்சு 1

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 எம் எஸ் மோஹனாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை* 8 30 திருநெல்வேலி என். குத்தாலலிங்கம்பிள்ளை பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம். எஸ். மோஹனாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் எஸ் மோகனாம்பாள் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 திருக்கண்ணபுரம் எஸ். ஸ்ரீனிவாச பிள்ளை புல்லாங்குழல் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 முன்னேற்றம் நவிச்சித்திரம் 7 15 இலக்கியவாசகம் குறிஞ்சிப்பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 எம் ஏ கல்யாணகிருஷ்ண பாகவதர் பாட்டு ஜி. எஸ். ரகுவீரன் வயலின் என். கணேசய்யர் மிருதங்கம் குற்றாலம் ஏ கன்னையன் கடம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 உபந்நியாசம்* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 திருக்கண்ணபுரம் எஸ் ஸ்ரீனிவாச பிள்ளை புல்லாங்குழல் 10 நீங்கள் கேட்டவை* 10 30 முடிவு.

புதன் மார்ச்சு 2

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 ஸ்ரீவாஞ்சியம் கே. ராமச்சந்திர ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 30 கும்பகோணம் எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருவிழந்தூர் எ. கே. கணேச பிள்ளை பாட்டு 2 தமிழில்செய்திகள் 2 05 திருவிழந்தூர் எ. கே. கணேச பிள்ளை பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 ஸ்ரீவாஞ்சியம் கே ராமச்சந்திர ஐயர் பாட்டு 5 40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 0 அறிவிப்புகள் 6 15 கிராமநிகழ்ச்சிகள் 7 கும்பகோணம் எம் ஆர். தர்மாம்பாள் பாட்டு 7 15 சிறுவர் நாடகம் 7 30 தமிழில்செய்திகள் 7-45 அது இயல்புதான் 2 தன் தொழில் பெருமை சிவன் அண்ணாமலை பேச்சு 8 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 புல்லாங்குழல்* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள்வானிலை ஆங்கிலம் 9 45 வீணை 10 சித்ரகானம்* 10 30 முடிவு.

வியாழன் மார்ச்சு 3

காலை 7 15 ஆரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 பத்மா கோபாலகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை* 8 30 என் புனிதாம்பாள் வீணை 9 முடிவு

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 பெண்ணுலகம் 2 தமிழில்செய்திகள் 2 05 ஆடுக ஆடுக வே பெண்களுக்கான இசை நிகழ்ச்சி 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருவிசநல்லூர் ஆர். சுப்ரமணியம் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம்* 7 30 தமிழில் செய்திகள் 7 45 கும்பிலை சுகாதாரம் 3 பொது சுகாதாரம் டாக்டர் பேச்சு 8 சித்ரகானம்* 8 15 குன்னக்குடி வெங்கடராமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9 15 குரல்வளை* 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 திருவிசநல்லூர் ஆர். சுப்ரமணியம் பாட்டு 10 30 முடிவு.

வெள்ளி மார்ச்சு 4

காலை 7 15 ஆரம்பம்* 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருச்சி என். லோகநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 ராதா ஜயராம் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம்* 1 30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 என் வி என் கனகப்பன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 என் வி என் கனகப்பன் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 அண்ணாமலைசர் வி. வேதவல்லி பாட்டு 5 40 குரான் ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 அண்ணாமலைசர் வி. வேதவல்லி பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7 45 பணவீக்கத்துக்கு மருந்து 3 லாபக் கட்டுப்பாடு 8 திருவாவடுதுறை என். ஆர் நடராஜசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 கார் இருள் நாடகம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 திருச்சி என் லோகநாதன் பாட்டு 10 நீங்கள் கேட்டவை* 10 30 முடிவு.

## ஜலமேல் நடக்கும் பெண்

அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மிஸ் மேசிநிட் என்னும் பெண் ஆளமான நீர் நிலைகளில் அதிக சிரமமின்றி நடந்து செல்கின்றாளாம். இங்கிலாந்திலுள்ள தேம்ஸ் நதியின் ஒரு கரையிலிருந்து மறு கரைக்கு இந்தப்பெண் நடந்தே சென்று நதியைக் கடந்தாளாம்; தலையும் இரு கரங்களும் நீர்மட்டத்திற்கு மேலிருக்க தண்ணீருள், நிலத்தில் நடப்பதுபோல கால்கள் வைன்றி நடந்து செல்கின்றாளாம்.


## காணி விற்பனை

வீடுகள் கட்டுவதற்கு மிகவும்சிறந்ததும் நகரத்திலும் அதன் எல்லையிலும் விசேஷ இடங்களில் இருப்பதுமான இரண்டு காணிகள் விற்பனவுக்கு இருக்கின்றன.

1. செம்மாதெருவின் வடக்கு அந்தத்துக்கணித்தாகவுள்ள "விளாங்கிவளவும், மறு பிரிவுகளும்" பர. கி. 9 குழி 1½

2. ஆனைக்கோட்டைக்குச் சமீபமாக வண் —வடமேற்கி லிருக்கும் காணி "மணற்காடும் மறுபிரிவுகளும்" பர. கி. 19 குழி 15.

இக்காணிகளை ஒருமித்தேனும் தனித்தேனும் வாங்க விரும்புவோர் 1949-ம்ஆண்டு மார்ச்சு 11-ம் திகதிக்குமுன் தங்கள் கேள்விப் பத்திரத்தை எனக்கு அனுப்புதல் வேண்டும். ஏனைய விபரங்களையும் என்னிடம் அறிந்துகொள்ளலாம்.

இ. சிவகுருநாதர்,
Proctor & Notary, Jaffna.
28-2-49
M 249.—1, 8, 15, 22-3-49.



## ஆசிரியர்களே உங்கள் மாணுக்களை வாங்கச் சொல்லுங்கள்

### தொடர்பான சரித்திரபாடப் புத்தகங்கள்
### 2-ம் 3-ம் 4-ம் 5-ம் வகுப்புக்குரியன

ஆக்கியோன்

**ச. ஜெயவீரசிங்கம் B. A. (Hons.)**

[ சரித்திர ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. ]

இப்புத்தகங்களை நீங்கள் ஆதரிக்கவேண்டியதற்கு நியாயங்களாவன:

1 வித்தியாபகுதியாரின் பாடத்திட்டத்துக் கமையும்படி இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.
2 இப்புத்தகங்களில் உபயோகமுள்ள பல சித்திரங்களும் விளக்கங்களும் இருக்கின்றன, ஒவ்வொரு பாடமும் வெகு சிரத்தையுடன் தயாரிக்கப் பட்டிருக்கிறது.
3 உண்மையான சரித்திரமன்றிக் கட்டுக்கதைகள் நீக்கப்பட்டுள்ளன.
4 இப்புத்தகங்கள் இலகுவான நடையி லெழுதப்பட்டன.
5 இப் புத்தகங்களிற் காணப்படும் சில பாடங்கள் ஆரம்பவகுப்புகளுக்கென எழுதப்பட்ட வேறு புத்தகங்களில் இல்லை.
6 இப் புத்தகங்களின் விலை மிகவும் சகாயமானது.

ஆசிரியர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தாராளமான கழிவு கொடுக்கப்படும்

ஏராளமான புத்தகங்கள் அச்சிடுவிக்கப்பட்டிருக்கின்றன
பிரதிகள் பிரபல புத்தக வியாபாரிக ளிடமேனும் நூலாசிரியரிடமேனும் பெறற்பாலன.

# R. K. சித்த வைத்தியசாலை

*நல்லூர்—கைலாசபிள்ளையார் கோவிலடி*

இராமேசுவரத்தில் அரசாங்க உதவியோடு பலவருடங்கள் எமது வைத்தியசாலையை நடாத்தியபோது சுகாதாரமந்திரி Dr. T. S. S. ராஜன், கலெக்டர் செட்டூர் தலைவர் சத்தியமூர்த்தி முதலிய பலர் வியந்தெழுதிய 1000-க் கணக்கான சான்றுகள் உள.

**எந்த வியாதிக்கும் தக்க ஆலோசனை கூறப்படும்**

**வைத்தியர் K. S. பரிபூரணாநந்தா**
Regd. Medical Practitioner, (Madras)
அகில இலங்கைச் சித்தவைத்திய சங்கத் தலைவர்—யாழ்ப்பாணம்.

Std 4 12-11—12-6—49



## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1942-ம் ஆண்டின் 13-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற யாழ். வண். மேற்கில் அடைவுபிடிக்கும் க. செ. த. செ. செல்லையாபிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 26-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| கம். | தி. | ரூ. ச. | பெயர் நகை விபரம் |
|---|---|---|---|
| | | | 1947-ம் ஆ. ஜெனவரிமாசம் |
| 4528 | 23 | 10 | நகைக்கடை கந்தையா ஏகாம்பரம் இமி வெ கல் மோதிரம் 1 |
| 4639 | 28 | 200 | ஐயனார்கோவிலடி கணபதிப்பிள்ளை கதிரவேலு எவ்ச காப்பு&கிளாவர்காப்பு சோடி 2 |
| | | | பிப்பிரவரிமாசம் |
| 4841 | 8 | 50 | வெள்ளாந்தெரு ஐயம்பிள்ளை ஆறுமுகம் முகப்புக்கு இமி சி கல் வைத்த பின்னல்சொலுசுக்காப்பு சோடி 1 |
| 4889 | 11 | 10 | ஆனைப்பந்தியடி ஆ. ஏகாம்பரம் இமி சி கல் எஸ் மோதிரம் 1 |
| 4977 | 15 | 200 | பெரியகடை இ. சங்கர ஐயர் அரைஞாண் கொடி 1 |
| 5016 | 17 | 150 | ஐயனார்கோவிலடி க. கதிரவேலு ஒட்டியாணம் 1 |
| 5087 | 21 | 30 | உரும்பிராய் அ. பரராசசேகரம் சாதா மோதிரம் 1 |
| 5163 | 25 | 12 | கலட்டி சரசு செல்லத்துரை இமி வெ கல் மோதிரம் 1 |
| | | | மார்ச்ச மாசம் |
| 5788 | 31 | 190 | சிவன்கோவிலடி குற்றாலிங்கம் சரவணப்பெருமாள் மழுக்கன் சிகப்புக்கல் பதக்கம் (1) பின்னல்சைச்சங்கிலி (1) கைப்பொத்தான் (2) நெஞ்சுப்பொத்தான்(3)வாட்சுசம்பி 3 |
| 5789 | 31 | 140 | சிவன்கோவிலடி குற்றாலிங்கம் சரவணப்பெருமாள் குண்டு வைத்த குதிரை&கோட்டைப்பவுண் (2) கொழுக்கி இல்லாத அரைஞாண்கொடி 1 |
| | | | எப்பிரல் மாசம் |
| 13 | 1 | 36 | கடைத்தெரு சண்முகரெத்தினஐயர் கணேசஐயர் ராணி ½ பவுண் (1) செய்கைக்கல்பென்டன் 1 |
| 42 | 2 | 58 | ஐயன் ஒழுங்கை சு. கணேசஐயர் மாற்றுவிட்ட எஸ்கடன் அல்பேட் சங்கிலி 1 |
| | | | மே மாசம் |
| 966 | 30 | 15 | புங்குடுதீவு மேற்கு அப்பாக்குட்டி பொன்னையா P இறுகல் [மோதிரம் 1 |
| | | | யூன் மாசம் |
| 1176 | 14 | 15 | ஆஸ்பத்திரிரோட் வேலுப்பிள்ளை கந்தையா சாதா மோதி 1 |
| | | | ஆகஸ்ட் மாசம் |
| 2222 | 13 | 200 | கந்தர்மடம் சின்னத்தம்பி நடராசா முறுக்குக்காப்பு சோடி 1 கொளுக்கி இல்லாத குண்டு கட்டை சங்கிலி 1 ஆடித்தன்&கிளாவர் மோதிரம் 2 |
| 2293 | 18 | 10 | கடைத்தெரு சண்முகரத்தினஐயர் கணேசஐயர் சிவப்பு சிகப் [புக்கல் மோதிரம் 1 |
| | | | நவம்பர் மாசம் |
| 3849 | 12 | 23 | நாவலர்சந்தி ஆறுமுகம் அம்பலவாணர் A A சீல்மோதிரம் 1 |
| 3932 | 17 | 25 | K. K S. ரோட்டு வே. சுப்பிரமணியம் 1 வயிரக்கல்குச்சு 1 |
| 4052 | 22 | 85 | சிவன்கோவிலடி S. தங்கப்பபத்தர் கெளிவலையல் காப்பு சோடி 1 கெமிகல் புரூச் 1 |
| 4057 | 22 | 13 | சிவன்கோவில் மேற்குவீதி தில்லைநாதர் சுப்பிரமணியம் சி கல் எஸ் மோதிரம் 1 |

மேற்படி கடையில் எடுபட்டநகை பிறகீழ்கலாக 16—3—49-ம் திகதி காலை 10 மணிக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. ஐயம்பிள்ளை உடையார்
வெந்திஸ் மேஸ்தர்.

M 244 25, 1—3—49.



ஸ்ரீ



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

# கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருவருளை முன்னிட்டு, அடுத்துவரும் விரோதிவருஷத்தில் துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயிற் கும்பாபிஷேகம் செய்யவேண்டி இருப்பதால், டி. கோயில் திருப்பணிகளைப் புதுக்கிச் செய்தற்கு ரூபா 25000-00 வரையில் மதிப்பிடப்படுகின்றது. இருப்பிற் பணம் குறைவாக இருத்தலால், அன்பர்கள் தங்களாலியன்ற பணஉதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

பணம் அனுப்பும் அன்பர்கள் கௌரவதனாதிகாரி C. மாணிக்கவாசகரவர்களின் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்க.

மேலும் நேர்முகமாகப் பற்றுச்சீட்டுடன் வருபவர்களிடமும் பணத்தைக்கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டில்லாரிடம் பணம் கொடுக்கவேண்டாம்.

பணம் அனுப்பும் விலாசம்:
C. மாணிக்கவாசகர்,
கௌரவ தனாதிகாரி,
புலோலி, பருத்தித்துறை.

இங்ஙனம்,
M. செல்லத்துரை,
கௌரவ காரியதரிசி,
துன்னாலை.

Std 9 25—1—49—22—4—49.


# மகா சிவராத்திரியின் மகிமை

[திரு. பொன் ஐ. சிவசாமி]

(முற்றொடர்)

### நோற்கும் முறை

இச்சிவராத்திரி மகாசிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி, மாத சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி என ஐந்துவகைப்படும். இன்று சைவர்கள் பெரும்பாலோரால் கொண்டாடப்படுவது மகா சிவராத்திரியே யாகையால் ஏனையவற்றைக் கூறுதல் விரிவஞ்சி, மகா சிவராத்திரி ஒன்றைப்பற்றியேகூறுவாம். மாசி மாதத்தில் வரும் மகா சிவராத்திரியை நோற்பவர்கள் திரியோதசியிலன்று ஒருபொழுதுண்டு சதுர்த்தசியிலன்று உணவு நீத்து உறக்கமகற்றி அடுத்தநாள் பிராமணர்களுக்கும் சிவனடியார்களுக்கும் அன்னதானம் செய்து சிவபாரணம் செய்யக்கடவர். முதற் சாமத்தில் பஞ்ச கௌவியத்தினாலும், இரண்டாஞ் சாமத்தில் பஞ்சாமிர்தத்தினாலும் மூன்றாம் சாமத்தில் தேனினாலும், நாலாம் சாமத்தில் கருப்பஞ் சாற்றினாலும் சுவாமிக்கு அபிஷேகம் செய்தல்வேண்டும். முதற்சாமத்தில் இருக்குவேதமும் இரண்டாம் சாமத்தில் யசுர்வேதமும்மூன்றாம் சாமத்தில் சாமவேதமும் நாலாம் சாமத்தில் அதர்வண வேதமும் ஓதவேண்டும்.

### பேறுபெற்றோர்

வசிட்ட முனிவரால் அரக்கனாகப் போகுமாறு சபிக்கப்பட்ட மித்திரசகன் என்னும் அரசன் ஒரு பிராமணனைக் கொலை செய்தமையாலுண்டான பிரமகத்தியை இவ்விரதமனுட்டித்துப் போக்கிக்கொண்டானென்றும், குணநிதி யென்னும் பிராமணன் சிவராத்திரியின் போது மங்கிய திருவிளக்கைத் தூண்டிவிட்டமையால் அளகை தேசாதிபதியாகிய குபேரனானான் என்றும், வறுமைவாய்ப்பட்ட சுகோதரன் என்னும் வேதியன் இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்தமையால் பூலோக இந்திரனானான் என்றும், ஈனனும் அங்குலன் சுகுமாரன் சௌமினி என்னும் கொடிய பாதகர்கள் சிவராத்திரியின்போது உறக்கம் நீக்கியிருந்தமையாலேயே பெறலரும் பேறுகள் பல பெற்றார்களென்றும், புராண நூல்கள் கூசாது கூறுகின்றன. ஒருவன் அளவற்ற தானதருமங்களைச் செய்திடினும், கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கிடினும், சிவராத்திரி விரதம் ஒன்றை அனுட்டித்த பலனை அடையமுடியாதெனப் பெரியோர்கள் கூறுகிறார்கள். ஒருவன் புத்திபூர்வமாயாதல், அன்றேல் அபுத்திபூர்வமாயாதல் சிவராத்திரி விரதத்தையனுட்டிப்பின் அவன் மோட்சவீட்டை அடைந்து இன்புறுவானென்பதும் சைவாகம நூலார் கண்ட முடிவாம்.

### குளிக்கச்சென்று சேறு பூசியதுமாதிரி

இன்று நம்மவருள் சிலர் (விரதமனுட்டிப்போர்களுள்)உறக்கத்தை அகற்றுவதற்காக நாடகம் அன்றேல் படம் பார்ப்பதற்காகச் செல்கின்றனர். இறைவன் திருநாமத்தைப் பாராயணஞ் செய்து, அவனது சொரூபத்தைக் கண்டு [illegible] புறமேனையிடிய நாளில் கேவலம் ஆபாசப் பேச்சைக்கேட்டும், ஆபாசக் களஞ்சியங்களின் கேளிக்கூத்தைக் கண்டு களிப்பதும் முறையாமா? இவ்விதம் முறைதவறி இம்மாபெரும் விரதத்தை அனுட்டிப்பதிலும்பார்க்க, அனுட்டியாமலிருப்பதே மேலெனக. இவ்வாறு முறை தவறி நடப்பவர்கள் குளிக்கச் சென்று சேறு பூசிக்கொண்டு திரும்பியவர்களேயாவர். ஆகையால் சைவராகப் பிறந்த நாம் மகா சிவராத்திரி விரதத்தை முறைப்படி அனுட்டித்து நினைத்தவற்றை நினைத்தவாறளிக்கும் சிவன்பாதத்தை அடைவோமாக.

# அரசியலிற் கண்ணோட்டம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

அதிலும் ஆளுவார், மன்னுயிர்யாவற்றிலும் கண்ணோட்டமுடையவர்களாய் எவர் மாட்டும் அன்பும் அருளும் உடையவர்களாய் எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் சமநோக்குடையன என்னும் கருத்துடையவர்களாய் இருத்தல் வேண்டும். ஒரு பகுதியார் குறையுற்று இடுக்கண் எய்த ஒருபகுதியார் நிறைவுற்று எப்படித்தலா ஆளுகைமுறை? இதனாலுமுறை ஓம்புதல்? இது கண்மூடித்தனமான வாழ்க்கையன்றி வேறல்ல.

இது ஒரு புறம் இருக்க, இந்திய ஏழைத் தொழிலாளரைக் கவனிப்போம். நமது ஈழ நாட்டின் மலை நாட்டைப் பொன்விளையும் பூமியாக்கி மேல் நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் இந்திய ஏழைத் தொழிலாளிகள் இன்றைக்கு அவர்கள் கதி யென்ன? அரும்பாடுபட்டு உடலை வருத்தி உழைத்த ஏழைகள், காட்டை நாடாக்கி மலையை மண்ணாக்கி பயிரோச்சியபண்பாளர், அவர்கள் தங்களை யேனிலைக்குக்கொண்டுவர அதனைப் பார்க்கச் சகியாத கண்ணல்லவா இவர்கள் கண்ணவர்களிடத்து எங்கள் ஆளுகை கருத்தாக்களின கண்களை எவ்வா மூடித்தைக் கின்றன. "அரசன் எவ்வழிக்குடிகள் அவ்வழி" என்றபடி அன்னவர் ஆளுகையின் கீழ் அமைக்த பல துறை அரசியல் பகுதிகளையும் அவ்வப் பகுதித் தலைவர்களையும் பாருங்கள். தங்கள் தங்கள் வேதனம் பெறுதலிலும் தங்கள் தங்களுக்கு மேறபட்ட தலைவர்களைத் திருப்திபடுத்துகிற அளவிலும் இருக்கிறார்களே தவிர பிரசைகள் நலனை கோரி உழைக்கிறார்களா? எல்லாரும் கண்மூடித்தனமானவாழ்க்கை கண்ணோட்டமில்லாத வாழ்க்கையும் ஆசிடினும் செய்கின்றார்கள், இதனால் பலப் பல கட்சிகளும் வாதங்களும் மலிந்துகிடக்கின்றன, பொதுநோக்காய கண்ணோட்டமின்மையும் தன்னளவில் தான சிறப்புற வாழ்தலை நாகரிகம் என நினைத்தும் இவ்வாறு அரசியலும் நாடும் பக்கமுற்றதற்கு ஏது என்பதை அறிவோமாக.


## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி சரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம், நெடுநாட்பட்ட ஆதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் கித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அவுகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்சி அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத் தடிப்பு சீழ்விழு நீர்க்கடுப்பு நீங்கும். செற்பனி கட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மல சலக்கட்டுநீக்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற்களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**காலீ குத்தல் விலை ரூப 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம். வெளிநாட்டிற்கு வீ. பீ. பீ. இல்லை

விலாசம்:
ஆயுர்வேத
சிவசோதி மெடிக்கல்ஸ்டோர்
— வல்வெட்டித்துறை — செ



உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

**இந்துசாதனத்தில்**

விளம்பரஞ் செய்யுங்கள்



## பவுண்மார்க ஓடுகள்

வந்துவிட்டன! வந்துவிட்டன!

யாவரும் நன்கு மதித்து வாங்கிப் பாவித்து வந்த பிரசித்தி பெற்ற பவுண்மார்க் ஓடுகள் இப்போ எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சிலர் பவுண்மார்க் ஓடுகள் எனச் சொல்லி விற்கும் ஓடுகளை எங்கள் பவுண்மார்க் ஓடுகள் என நினைத்து ஏமாந்து போகாமல் எச்சரிக்கையா யிருக்கும்படி யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்

பவுண்மார்க் ஓடுகளின்
ஏசண்டுகள் நாங்களே

சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்
யாழ்ப்பாணம்.

M 10 14—2—14-5-49



# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

*இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்*

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 00, 000 |

தலைமைக்காரியாலயம்:- பிறிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ் வங்கி
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (மையநகரமண்டபம்),அநுராதபுரம், மட்டக்களப்பு.
யாழ்ப்பாணக்கிளைக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

| | |
|---|---|
| நடைமுறைக் கணக்கு: | இலங்கையில் (திருக்கோணமலை வதனை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும் |
| சேமிப்புப் பணம்: | கூடக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம்தோறும் 1½ விகிதம் கேட்டபோது திருப்பிக் கொடுக்கப்படும் |
| நிரந்தர சேமிப்பு: | [illegible] |

கடன்களும் மோதிரமாக்க கடன் பெறுதலும்: [illegible] கொடுக்கப்படும்.
நாணயமாற்று: [illegible] உண்டு.
பிறநாட்டுவைதாரப்பகுதி: [illegible] வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு

Std. 541-8-48—30-7-49.



## கோவை தமிழ்ச் சங்க வெளியீடுகள்

### C. K. சுப்ரமணிய முதலியார் எழுதியது

| | | | | ரூபா. சத |
|---|---|---|---|---|
| பெரியபுராணம் | ... | தொகுதி | I ... | 10 50 |
| ,, | ... | ,, | II ... | 10 50 |
| ,, | ... | ,, | III 1-ம், 2-ம் | 13 15 |
| ,, | ... | | 21-வது வெளியீடு | 1 60 |
| ,, | ... | | 22 ,, ,, | 1 60 |
| ,, | ... | | 23 ,, ,, | 1 60 |
| ,, | ... | | 24 ,, ,, | 1 60 |
| ,, | ... | | 25 ,, ,, | 1 60 |
| ,, | ... | | (கண்ணப்பர் புராணம்) | 2 10 |
| ,, | ... | | (திருக்குறிப்புத் தொண்டர்) | 1 60 |
| ,, | ... | | (சண்டேஸ்வரர்) | 80 |
| ,, | ... | | (காரைக்காலம்மையார்) | 1 60 |
| ,, | ... | | (அப்பூதி நாயனர்) | 55 |
| ,, | ... | | (கண்ணப்பர் சரிதம்) | 45 |
| ,, | ... | | (சுந்தரர் தேவர்) | 55 |
| ,, | ... | | (திருநாவுக்கரசர்) | 40 |
| C. K. சுப்ரமணிய முதலியார் வாழ்க்கை வரலாறு | | | | 30 |

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Tuesday March 1, 1949